பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 30 (14—8—72) திங்கள் — வெளியூர்: ஆடி 31 (15—8—72) செவ்வாய் [இதழ்: 52

தென் மாநிலங்களின் பொது அமைப்பு

முதன்முதலாக மின்சாரம் வழங்கும் துறையில் துவக்கம்

சென்னை, ஆக. 14—

தமிழகம் -- கேரளம் -- ஆந்திரம் -- கருநாடகம் ஆகிய மாநிலங்கள் இணைந்த தென் பகுதி மின்சார விநியோக அமைப்பு இன்று முதல் செயல்படத் துவங்குகிறது.

"முதல் தடவையாக இப்படிப்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தி தெரியாத தியாகிகட்கு அவமதிப்பு?

விருது வழங்குவதிலும் விரும்பத்தகாத செயல்

டில்லி மேலிடத்தின் இந்தி வெறி-- இரா. செழியன் கண்டனம்

புதுடில்லி, ஆக. 14

இந்தியாவின் விடுதலை வெள்ளி விழாவை முன்னிட்டு, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படவிருக்கும் 'தாமிரப் பட்டம்' விருதுகளில் வெறும் இந்தி எழுத்துக்கள் மட்டுமே பொறிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

'இந்த விருதுகளில் இந்தி மட்டுமே இருக்கும்' என்று இதுவரையில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஆயினும், கடைசி நேர மாறுதல் ஏதேனும் இருந்தாலன்றி அந்த விருதுகள் இந்தியிலேயே இருக்கும் என்று தெரிய வருகிறது.

ஆகவே, இந்தி தெரியாத ஒரு விடுதலைப் போராட்ட வீரர் இந்தத் 'தாமிரப் பட்டய'த்தைப் பெறும்போது, அதில் என்ன எழுதியிருக்கிறது என்பது புரியாமல் திகைக்க வேண்டியிருக்கும்.

சுதந்தர நாளன்று சிறப்பு நிகழ்ச்சி ஒன்றில் இந்த விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன.

இது குறித்து நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் இரா. செழியன் அவர்கள் கருத்தறிவித்ததாவது:—

"இந்தியில் மட்டுமே 'தாம்ர பத்ரா' (தாமிரப் பட்டயம்) இருக்கும் என்பதை அறிந்து வியப்படைந்தேன்; இந்தப் பட்டயத்தை வாங்குபவரின் தாய் மொழியிலேயே அவைகள் அமைந்திருக்குமானால் சிறப்பாகவும் – பொருத்தமாகவும் இருந்திருக்கும்; ஆயினும் இது வரையில், இது குறித்து அதிகாரபூர்வமான அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லையாதலால், இது குறித்து மேலும் நான் எதுவும் இப்போது சொல்ல விரும்பவில்லை."

வியப்புக்குரிய விருது வழங்கு விழா

டில்லி செங்கோட்டையில் நடைபெறும் 'தாம்ர பத்ரா' வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு சுமார் 1,000 விடுதலை வீரர்களுக்கு மத்திய அரசு அழைப்பு அனுப்பியிருக்கிறது; அவர்களிடையே தலைமையமைச்சர் இந்திராகாந்தி சொற்பொழிவாற்றுவார். விடுதலைப் போராட்டக் கால நிகழ்ச்சிகளை நினைவுகூரும் பாடல்களும் கூட்டாக இசைக்கப்படும்.

'தாம்ர பத்ரா' விருது பெறத் தகுதி பெற்றிருக்கும் ஏனையோருக்கு, அந்தந்த மாநிலங்களின் முக்கியப் பகுதிகளில், இரண்டு மூன்று மாதங்களில் நடைபெறும் விழாக்களில் இப்பட்டயம் வழங்கப்படும்.

அந்நிய ஆட்சியால் 6 மாதங்களோ அதற்கு மேற்பட்டோ சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு இப்பட்டயம் வழங்கப்படுகிறது.

டெல்லியில் நடைபெறும் இந்தச் சிறப்பு நிகழ்ச்சியையொட்டிச் செய்திகளைச் சேகரிக்கும் பத்திரிகையாளர்களுக்கும் புதிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

ஏற்கனவே, பத்திரிகையாளர் நிரந்தர அனுமதிச் சீட்டு வைத்திருப்பினும்கூட, இச் செய்தியைச் சேகரிக்கத் தனியாக அனுமதி வாங்கவேண்டுமென்று கூறப்படுவது ஏனென்று பலருக்கும் புரியவில்லை!

உணவுக் கிடங்கில் கொள்ளை

வறட்சியின் எதிரொலி

விஜயவாடா, ஆக. 14—

கிருஷ்ணா மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் -- அக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 200 தாழ்த்தப்பட்டவர்களும் -- சிறுவர்களும் ஓர் உணவுக் கிடங்கிலிருந்து 70 மூட்டை நெல்லைக் கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றனர்.

கடந்த 11-ம் நாளன்று இந்தக் கொள்ளை நடைபெற்றிருக்கிறது.

இந்தப் பகுதி கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் கூலி நிர்ணயம்

அமைச்சர் மன்னை நாராயணசாமி முன்னிலையில் உடன்பாடு

தஞ்சை, ஆக. 14—

தஞ்சையில் விவசாயத் தொழிலாளர் கூலிப் பிரச்சினையில் நற்று ஒரு சுமூகமான முடிவு ஏற்பட்டது.

நிலச் சொந்தக்காரர்களுக்கும் -- தொழிலாளர்களுக்கும் இடையே நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது.

இந்த உடன்பாட்டின்படி, ஒரு நாளைக்கு ஆண் தொழிலாளி ஒருவருக்கு 6 லிட்டர் நெல்லும் — 1.50 பணமும் தரப்படும்; அல்லது 3.70 பணமாகத் தரப்படும்.

பெண்களுக்கு 5 லிட்டர் நெல்லும் —50 காசும் அல்லது ரூ 2.25 பணமாக மட்டும் தரப்படும்.

மேற்குத் தஞ்சையைப் பொறுத்தவரையில் ஆண்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 3.50-ம், பெண்களுக்கு ரூ. 2.25-ம் தரப்படும்.

அறுவடையின்போது அறுவடையான ஒவ்வொரு 54 லிட்டர் நெல்லுக்கு 6 லிட்டர் நெல் கூலியாகத் தருவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதுவரையில், கணபதியா பிள்ளை குழு பரிந்துரைப்படி கூலி வழங்கப்பட்டு வந்தது; அந்தப் பரிந்துரை, இந்த மாதம் 3-ந் தேதியுடன் காலாவதியாகிவிட்டது.

நேற்று இந்த முடிவினை மேற்கொண்ட கூட்டத்தை, வேளாண்மைத் துறை அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள் கூட்டியிருந்தார்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர், அரசாங்கத்திற்குத் தரமான நெல் வழங்குமாறு நிலச் சொந்தக்காரர்களைக் கேட்டுக்கொண்டார்.

பண்ணுருட்டியில் முந்திரித் தொழிற்சாலை

சென்னை, ஆக. 11—

"தென்னாற்காடு மாவட்டம் பண்ணுருட்டியில், இரண்டு நவீன முந்திரித் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள்பற்றி ஆராயப்பட்டுவருகிறது; விரைவில் அது பற்றி முடிவு செய்யப்படும்"

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், சட்டப் பேரவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

பிராமணர்களுக்கு இடம் மறுக்கப்பட்டதா?

டி. என். அனந்தநாயகிக்குச் சுடச்சுடப் பதில்

சென்னை, ஆக. 13—

டி. என். அனந்தநாயகி:—"சட்டக் கல்லூரியில் பிராமணர்களுக்கு அதிக இடம் தரவில்லை; இதிலே கூடவா சாதித் துவேஷம்?"

முதலமைச்சர்:—"சட்டக் கல்லூரியில் 700 இடங்களுக்கு 29 பிராமணர்களுக்குத்தான் இடம் தரப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் 35 பேருக்கு இடங்கள் தரப்பட்டிருக்கின்றன."

டி.என். அனந்தநாயகி:—"நேற்று வரை எங்களுக்குக் கிடைத்த தகவல் இது; முதலமைச்சர் சொன்னதுபோல் 35 இடங்கள் தரப்பட்டிருக்குமானால் நன்றி."

—சட்டப் பேரவையில்

தாக்குதல் நடத்தியவர்கள்மீதும் வழக்கு இல்லை

கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஆக. 12

'விவசாயிகள் சங்கக் கிளர்ச்சியின்போது, கட்சி அலுவலகங்கள் -- கடைகள் - வீடுகள் தாக்கப்பட்டது தொடர்பான எல்லா வழக்குகளையுமே தமிழக அரசு திரும்பப் பெற்றுக் கொள்ளும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சட்டப் பேரவையில் அறிவித்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகையில் பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் ஏ. ஆர். பெருமாள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே முதலமைச்சர் இவ்வாறு அறிவித்தார்.

அறிவிப்பு

விடுதலை வெள்ளி விழாவை முன்னிட்டு நாளை நமது அலுவலகத்துக்கு விடுமுறையாகையால், 'நம் நாடு' அடுத்த இதழ் 16--8—72 அன்று சென்னையிலும், மறு நாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

ஏழை மக்கள் இன்னும் முன்னேறவில்லை

பொருளாதார விடுதலைக்குப் பாடுபடுவோம்-- இந்திரா காந்தியின் வெள்ளி விழாச் செய்தி

புதுடில்லி, ஆக. 14-

"இந்திய விடுதலை பெற்ற இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவினை இந்தத் திங்களில் நாம் கொண்டாடுகிறோம்; கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் ஏற்பட்ட சோதனைகளையும் அறைகூவல்களையும் எதிர்த்து வெற்றி பெற்று வலுவடைந்துள்ள நமது நாடு மேலும் அதிக ஒற்றுமையுடனும் -- உறுதியுடனும் தனது இலட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

நமது நாட்டில் சனநாயகம் நிலைத்து நின்று -- தனது தகுதியை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது; ஆனால், 'பொருளாதாரத் தன்னிறைவு' என்னும் பொருளாதார விடுதலையை நாடு இன்னமும் அடையவில்லை; ஏழை மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்னும் முன்னேற்றம் ஏற்பட வேண்டியிருக்கிறது.

ஏழ்மை -- ஏற்றத்தாழ்வு ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவதற்கு, நாட்டு மக்களின் ஒருமித்த முயற்சி இன்றியமையாதது; நாட்டு மக்களின் நம்பிக்கையும் ஆழ்ந்த ஈடுபாடுமே நாடு விடுதலை அடைவதற்குக் காரணமாக இருந்தன; நமது இலட்சியம் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் இருக்கிறது; ஆனால், இதுவரையில் வேறு எந்த நாடும் இவ்வளவு பெரிய பணியில் ஈடுபட்டு இவ்வளவு சிக்கலான பிரச்சினைகளைச் சமாளித்ததில்லை; ஆகவே, இனி வரக்கூடிய -- நமக்குத் தெரிந்ததும் தெரியாததுமான தடைகளையெல்லாம் சமாளிப்பதற்கு ஏற்ப நாம் வழி வகுத்துக்கொள்ள வேண்டும்.

எல்லோருக்கும் நீதியும் -- சம வாய்ப்பும் அளிப்பதும், ஒவ்வொரு குடிமகனும் முழு வளர்ச்சியடைத்தக்கதும், ஒவ்வொருவரும் சனநாயக முறையில் செயல்பட்டு ஒவ்வொருவரும் தம் பொறுப்புக்களை உணர்ந்து நடப்பதற்குமான ஒரு புதிய சமுதாயத்தை நோக்கிச் செல்லும் நமக்கு, தன்னம்பிக்கையும் துணிவும் வழித்துணைவர்களாக இருக்கட்டும்."

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 2003 ஆடி 30 (14—8—72) திங்கள்

வாழ்க -- இந்தியச் சுதந்தரம்!

"நமது நாட்டில் சனநாயகம் நிலைத்து நின்று -- தனது தகுதியை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது; ஆனால், 'பொருளாதாரத் தன்னிறைவு' என்னும் பொருளாதார விடுதலையை நாடு இன்னமும் அடையவில்லை; ஏழை மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்னும் முன்னேற்றம் ஏற்பட வேண்டியிருக்கிறது."

இப்படிக் கூறியிருப்பவர் யார்? நிச்சயமாக நாமல்ல -- வேறு மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவருமல்லர் -- இந்தியத் துணைக் கண்டத்தின் இன்றையத் தலைமையமைச்சராக இருந்துவரும் திருமதி இந்திரா காந்திதான் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலை வெள்ளி விழாவை நாடு கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தறுவாயில், இப்படிப்பட்ட கருத்தினை நாமோ -- நம்மைப் போன்ற மாற்றுக் கட்சியினரோ வெளியிட்டிருந்தால், 'இவர்களெல்லாம் தேச பக்தி இல்லாதவர்கள் -- சுதந்தரத்தைக் குறைகூறுவதே இவர்கள் வேலை' என்று -- காங்கிரசுப் போர்வையில் இருந்துகொண்டிருக்கும் புதிய தேச பக்தர்கள் -- குற்றஞ்சாட்டக்கூடும். நல்ல வேளையாக, நாடாளும் பொறுப்பிலுள்ள இந்திரா காந்தியே கூறிவிட்டார்!

தலைமையமைச்சர் வெளியிட்டுள்ள சுதந்தர வெள்ளி விழாச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"நாட்டுக்கு அரசியல் சுதந்தரம்தான் கிடைத்திருக்கிறது; சமுதாய -- பொருளாதாரச் சுதந்தரம் இன்னும் கிடைக்கவில்லை" என்று நாமே முன்னரே கூறியபோதெல்லாம், ஆளும் பொறுப்பில் இருந்த காங்கிரசுக்காரர்கட்கு நம்மீது எரிச்சல் ஏற்பட்டது; இருபத்தைந்து ஆண்டுக்குப் பிறகு, அவர்களே இந்த உண்மையை உணரத் தலைப்பட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

சுதந்தரம் வந்ததும் சிலருக்குச் சுகவாழ்வு கிடைத்தது; சுதந்தரத்தின் பேரால் ஒரு சாராருக்குப் பதவியும்--பவிசுகளும் கிடைத்தன; அவர்களின் துணையால் பணக்காரர்கள் மேலும் கொழுத்தனர்; முதலாளிகளின் ஏகபோகச் சுரண்டலுக்கு வழி ஏற்பட்டது; இதைத் தவிர, நாட்டு மக்களின் நலிவைப் போக்கவோ -- நிலையை உயர்த்தவோ கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் ஏதும் செய்யப்படவில்லை!

"ஏழை மேலும் ஏழையானான் -- பணக்காரன் மேலும் பணக்காரன் ஆனான்" என்பதுதான் இருபத்தைந்து ஆண்டுச் சுதந்தர ஆட்சியில் நாடு கண்ட பலன்!

இதனை எடுத்துச் சொன்ன மாற்றுக் கட்சியினர்தாம் மட்டந்தட்டப்பட்டனரே தவிர, ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் உண்மையை உணர்ந்து உருப்படியான காரியங்களைச் செய்ததாகக் காணோம்!

வெறும் அரசியல் சுதந்தரத்தில் மகாத்மா காந்தியடிகளுக்குக் கூட மனநிறைவு ஏற்படவில்லை; 'இன்னும் நாட்டுக்கு உண்மையான சுதந்தரம் கிடைக்கவில்லை' என்றுதான் அவர்தம் இறுதி மூச்சு உள்ளவரை சொல்லிக் கொண்டிருந்தார்; 'சமூக -- பொருளாதார விடுதலை பெற்றாக வேண்டும்' என்று வலியுறுத்திக் கொண்டிருந்தார்.

"அரசியல் -- சமுதாயம் -- பொருளாதாரம் ஆகிய மூன்று துறைகளிலும் நாம் விடுதலையடைந்தாக வேண்டும்" என்பதற்காகத்தான், திராவிட முன்னேற்றக் கழகம்கூட தோற்றுவிக்கப்பட்டது.

"அரசியல் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுவிட்ட நாம், பொருளாதாரச் சுரண்டல் ஆதிக்கம் ஒழிந்து சமதர்மச் சமுதாயம் மலரவும், சமுதாயத்துறையில் சாதி -- மத ஏற்றத்தாழ்வுகள் நீங்கி 'ஒன்றே குலம் -- ஒருவனே தேவன்' என்ற உயரிய தத்துவம் நிலை நாட்டப்படவும் வேண்டும்" என்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம், மும்முனைகளிலும் அரும்பாடுபட்டு வருகிறது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் பிறகுதான் பொருளாதாரத் துறைகளைப்பற்றிக் காங்கிரசுக்காரர்கள் எண்ணிப்பார்க்க முனைந்துள்ளனர்; சமுதாய மறுமலர்ச்சிபற்றி அவர்கள் எண்ணிப் பார்ப்பதே இல்லை.

சாதிமதச் சழக்குகள் ஒழியவேண்டும்; ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு நீங்கவேண்டும்; 'எல்லோரும் ஓர்குலம்; எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று பாடிய பாரதியின் கனவு நனவாகவேண்டும்; இல்லையெனில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசர் கூறியதுபோல 'விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்'.

விடுதலை வெள்ளி விழாக் கொண்டாடும் இந்த நேரத்தில், இந்தியாவின் ஆளுங் கட்சியினராக உள்ள காங்கிரசுக்காரர்கள் இவற்றையெல்லாம் மனத்தில் கொள்ளவேண்டும்.

சுதந்தரத்தை வெறும் அரசியல் இலாபவேட்டைக்காகவும் -- சுயநலப் பாதுகாப்புக்காகவும் மட்டுமே பயன்படுத்திக்கொண்டு இருபதாண்டுக்காலத்தைக் கடத்திவிட்டு--இன்று நடுத்தெருவுக்கு வந்து நிற்கும் சிண்டிகேட் கட்சியினரும் இதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த நேரத்தில் இதனை நாம் எடுத்துக் கூறுவதாலேயே, 'சுதந்தரத்துக்கு நாம் எதிரிகள்' என்று பொருளல்ல; நமது ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களைவிட, சுதந்தரத்தை வரவேற்றுப் போற்றியவர்கள் காங்கிரசுக் கட்சியில்கூட இருந்திருக்க முடியாது. உண்மை நிலையை எடுத்துக் கூறுவது, உண்மை உணர்ந்து திருந்திக் கொள்வதற்காகத்தான்!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 'உண்மைச் சுதந்தரத்தை எல்லா மக்களும் சுவைக்க வேண்டும்' என்பதற்காகத்தான் கழக அரசு, மக்கள் நலத் திட்டங்கள் பல தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று பேரறிஞர் அண்ணா கண்ட கனவை, கலைஞர் அவர்கள் நனவாக்கி வருகிறார்கள்!

இந்தியத் துணைக்கண்டத்துக்கே பல துறைகளிலும் வழிகாட்டும் அளவுக்குத் தமிழக அரசு முன்னோடியாக இருந்து வருகிறது!

'ஏழை இந்தியா'வாகவே இன்னமும் இருந்துவரும் இந்நாடு எல்லாவகையிலும் முன்னேறி--உலக வல்லரசுகளில் ஒன்றாகத் திகழும் நாளை விரைவில் காண வேண்டும்; அதற்கான வகையில் நாம் அனைவரும் பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்ற உறுதி பூண வேண்டும்.

விடுதலை வெள்ளி விழாக் கொண்டாடும் இந்த நேரத்தில், விடுதலைக்காக இரத்தம் சிந்தியும் -- சிறைவாழ்வு ஏற்றும் -- இன்னல்கள் பல அனுபவித்தும் -- உயிரையே ஈந்தும் தியாகங்கள் புரிந்த அனைவரையும் வணங்குகிறோம்.

வாழ்க -- இந்தியச் சுதந்தரம்!

வேல்க -- நாட்டின் இலட்சியம்!

கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

ஆக. 15 மாலை 3-மணி: தஞ்சாவூர்—சுதந்தர நாள் வெள்ளி விழா ஊர்வலத்தில் கலந்துகொள்ளல்; இரவு 7-மணி: தஞ்சாவூர்—சுதந்தர நாள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளல்.

போக்குவரத்துத் துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

ஆக. 15 மாலை 4 மணி: சிவகங்கை—விடுதலை வீரர்கள் வரவேற்பு விழாவில் கலந்துகொள்ளுதல்; 5 மணி: ஊர்வலத்தில் கலந்துகொள்ளல்; 7 மணி: பொதுக்கூட்டம்; இரவு 8-30 மணி கலை நிகழ்ச்சிகள்.

'எல்லா உண்மைகளையும் மக்கள் அறிவர்'

[✶]

'நந்தி'களாக இருந்தவர்களால்தான் நாட்டிற்குச் சேதம் ஏற்பட்டது'

விவசாயச் சங்கப் போராட்டத்தில் விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஏற்பட்டதற்கு யார் பொறுப்பு?'--சட்டப்பேரவையில் முதலமைச்சர் கலைஞர் உண்மை நிலை விளக்கம்

சென்னை, ஆக. 12—

"விவசாயிகளுடைய போராட்டத்தின் விளைவுகள் -- அதனால் ஏற்பட்ட உயிர்ப் பலிகள் -- விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஆகியவற்றிலே இந்த மன்றத்தினர் கொண்டிருக்கின்ற ஆழ்ந்த கவலைக்கு எள்ளளவும் என்னுடைய கவலை குறைந்தது அல்ல என்பதை மிகுந்த பணிவுடன் -- மனிதாபிமான உணர்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

"எப்படிச் செத்தாலும் -- என்ன காரணத்திற்காகச் செத்தாலும் -- இறந்துவிட்டவர்களுக்கும் அவர்களை இழந்துவிட்டவர்களின் இல்லத்தினருக்கும் அனுதாபம் தெரிவிப்பதுதான் அரசியல் நாகரிகமாகும் -- அரசியல் பண்பாடு கொண்டவர்களுடைய செயலாகும்; அந்த வகையில் மீண்டும் ஒரு முறை இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று சட்டப் பேரவையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் சுட்டிக் காட்டிக் குறிப்பிட்டார். 'தமிழ்நாடு அமைச்சரவைமீது நம்பிக்கையில்லை' எனக் கூறும் டாக்டர் எச். வி. ஹாண்டே (சுதந்தரா) -- கே. டி. கே. தங்கமணி (வலது கம்யூனிஸ்டு) ஆகியோரின் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்து சுமார் 75 நிமிட நேரம் பேசினார்; நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்த எச். வி. ஹாண்டேயும் -- கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்த கே. டி. கே. தங்கமணியும் முதலமைச்சரின் பதிலுக்குப்பின் -- கடந்த சனிக்கிழமையன்று மாலை நடைபெற்ற கூட்டத்தில் -- விவாதத்தை முடித்து வைத்துப் பேசினர். இறுதியில், பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், 'முதலமைச்சர் பேசப்போகிறாரா' என்று வினவினார். உடனே முதலமைச்சர் எழுந்து,

"'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் -- அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு' என்ற குறளை அறிந்த மக்கள் எல்லா உண்மைகளையும் உணருவார்கள்" என்று குறிப்பிட்டார்.

பின்னர், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது வாக்கெடுப்பு நடைபெற்றது; தீர்மானத்திற்கு ஆதரவாக 27 வாக்குகளும், தீர்மானத்திற்கு எதிராக 179 வாக்குகளும் கிடைத்தன; இறுதியில் சட்டப் பேரவைத் தலைவர், எச். வி. ஹாண்டே அவர்களால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானமும் -- கே. டி. கே. தங்கமணி அவர்களால் கொண்டு வரப்பட்ட கண்டனத் தீர்மானமும் தோல்வி அடைந்தன' என்று அறிவித்தார்.

முதலமைச்சர் அளித்த பதிலில், 'விவசாயிகள் போராட்டத்தின் போது நடைபெற்ற வன்முறைகளுக்கு வலது கம்யூனிஸ்டுக் கட்சியே காரணமாகும் -- வன்செயல்களைத் தூண்டிவிட்டது அக்கட்சிதான்' என்று குறிப்பிட்டு -- இதற்கு ஆதாரமாக அக்கட்சியின் மாநிலக் குழு சார்பில் அதன் அனைத்துக் கிளைச் சங்கங்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை ஒன்றைக் காண்பித்தார்; அதுபோது அவர், 'இந்தப் போராட்டத்தில் 17 உயிர்கள் பறிக்கப்பட்ட துர்ப்பாக்கியமான சம்பவத்திற்கு யார் காரணம் -- எது காரணம் என்று தெரியப்படுத்தப் போகிறேன்' எனக் கூறிவிட்டு, வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் அந்தச் சுற்றறிக்கையை வாசித்தார்; அதில்,

"தமிழ்நாட்டில் விவசாயிகள் இயக்க வரலாற்றில் புதிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது; இந்தச் சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு நமது கட்சிக் குழுக்களும் -- அணியினரும் தீவிரப் போராட்டத் திட்டங்கள் வகுத்துச் செயல்பட வேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது.

உடனே முதலமைச்சர், எதிர்க் கட்சியினர் பக்கம் திரும்பி, 'இந்தச் சுற்றறிக்கை பற்றி திரு ஹாண்டே -- திரு. பொன்னப்ப நாடார் -- திருமதி அனந்தநாயகி ஆகியோருக்குத் தெரியாமல் போயிருக்கலாம்' என்று சுட்டிக்காட்டினார்; 'விவசாயப் போராட்டம் -- என்ற வகையிலேயே -- அனுதாப உணர்விலேயே இதில் கலந்து கொண்டார்கள்; திரைக்குப் பின்னால் நிகழ்ந்திருப்பது அவர்களுக்குத் தெரியாது என்றே கருதுகிறேன்; உண்மை நிலையை இப்போதாவது அவர்கள் உணர வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

பின்னர் அவர், 'இந்த விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்பட்டதற்கு யார் பொறுப்பு என்பது, இதிலிருந்தே தெரியவருகிறது; இந்த அரசுக்குத் தொல்லை கொடுத்து -- ஆட்சி நடத்துபவர்களைக் கவிழ்க்கத் திட்டமிட்டு நடத்தப்பட்ட சதியே ஆகும்' என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர், 'வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு எங்கெங்கு மிகுதியாக இருந்ததோ அங்கெல்லாம் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன -- அங்கெல்லாம் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன' என்றார்.

"இதற்கு முன்பிருந்த ஆட்சியில் -- காங்கிரசு ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களில் உயிர் இறந்தவர்களின் குடும்பத்தினர் கண்ணீரும் கம்பலையுமாக அறுந்த தாலியைக் கையிலே வைத்துக் கொண்டு அரசினரைப் பார்த்துக் கெஞ்சிய போது -- அழிந்த திலகத்தைத் தங்கள் கைகளாலேயே தேய்த்துக் கொண்டு அன்றைய அமைச்சர்களைப் பார்த்துப் பரிதாபமாகக் கண்ணீர் வடித்தபோது -- 'அந்தக் குடும்பங்களுக்கு உதவியளிக்க வேண்டும்' என்கின்ற உள்ளமும் இல்லாதவர்களாக இருந்தார்கள்; உள்ளம் இல்லாதது மட்டுமல்ல -- அந்த உள்ளம் இருக்கவேண்டிய இடத்தில் பள்ளம்தான் இருந்தது; அப்படிப்பட்டவர்கள்தான் அன்றையத் தினம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்தார்கள்" என்று வேதனையுடன் குறிப்பிட்டார்.

"இன்றையத் தினம் அப்படிப்பட்ட நிலைமை இல்லை; இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ. 5,000 நிதி வழங்கியிருக்கிறோம்; அப்போதே நான், 'போன உயிர் கிடைக்கப் போவதில்லை; அந்த உயிருக்கு மதிப்பு அல்ல இந்த ஐயாயிரம் ரூபாய்; அந்த உயிர் மதிப்பற்றது; ஆனால், அவரை நம்பியிருந்த குடும்பத்திற்கு இந்த அரசாங்கம் தன்னுடைய கடமையைச் செலுத்துவதிலே ஒரு பங்கு பெறுகிறது -- என்கின்ற வகையிலே கொடுக்கிறோம்' என்று சொன்னேன்; ஆக, அந்த உயிருக்கு விலை ஐயாயிரம் ரூபாய் நிச்சயமாக ஆகாது" என்று தழுதழுத்த குரலுடன் முதலமைச்சர் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள், தம்முடைய பதிலில் விவசாயிகள்—விவசாயத் தொழிலாளர்கள் உட்பட பல்வேறு துறைகளிலும் பணியாற்றுபவர்கள் அனைவருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு செய்த நன்மைகள்பற்றி நீண்டதோர் விளக்கப் பட்டியலைத் தந்தார்; சமூகத்தில் உள்ள அனைவருக்கும் தி. மு. கழக அரசு இதுவரையில் பற்பல நன்மைகளைச் செய்திருக்கிறது'என்றும் குறிப்பிட்டுக் கூறினார்.

1967-ல் தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் அரசு ஊழியர்களின் வேலை நிலைமையிலும் மற்றும் பல பிரச்சினைகளிலும் மேம்பாடு – மின்சார ஊழியர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு நீண்ட -- குறுகிய காலக் கடன்களுக்கு வழிவகை ஏற்படுத்தியது -கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்டங்கள், மாணவர் கிளர்ச்சிகள், ஆசிரியர் பிரச்சினைகள், பாடமொழிக் கிளர்ச்சிகள், ஏனைய துறைகளிலுள்ளவர்களின் கோரிக்கைகள் ஆகிய சமூகத்தின் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் அனைத்திலும் கழக அரசு அனுதாபத்துடனும் மனிதாபிமான உணர்ச்சியின் அடிப்படையிலும் அணுகிச் செயலாற்றியது ஆகியவைகளையெல்லாம் விவரித்துக் கூறினார்.

பின்னர் அவர், பிரச்சினைகள் எழுந்ததற்கான காரணங்களை விளக்கினார்; 'விவசாயிகள் பிரச்சினையில் ஏற்கனவே அரசு ஏற்றுக்கொண்டவைகளை மீண்டும் கோரிக்கைகளைப்போல் வைத்து —12 அம்சத் திட்டம் வகுத்துப் போராட்டத்திற்கு வித்திட்டார்கள்' என்று சுட்டிக்காட்டினார்.

விவசாயப் போராட்டக் குழுவினருக்கும் -- அரசுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தங்களை அரசு செயல்படுத்தவில்லை என்று கூறப்படும் புகார்களை அவர் மறுத்தார்; ஒப்பந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றையும் அவர் வாசித்துக் காட்டி -- அவைகளில் பல நிறைவேற்றப்பட்டிருப்பதையும், சில நிறைவேற்றப்படுவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டிருப்பதையும் விளக்கிக் கூறினார்.

"மின்சாரக் கட்டணம் பற்றிய முதல் பிரிவைச் செயல்படுத்த 1—8—72 அன்றே அரசாங்கம் உத்தரவுகளை அனுப்பியாகிவிட்டது; இரண்டாவது பிரிவு ஒப்பந்தப்படி, மின் கட்டணம் பாக்கிக்காகத் தொடரப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுவது -- பழைய பாக்கிகளை நான்கு தவணைகளாக வசூலித்துக் கொள்ள ஒப்புதல் -- மின்இணைப்புத் துண்டிக்கப்பட்டிருந்தால் திரும்ப இணைப்புத் தரப்படுவதற்குச் செலுத்தவேண்டிய கட்டணத் தொகையான ரூ. 6 ஐக் கேட்கக்கூடாது என்ற ஆணை -- ஆகியவைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றி ஆக. 3-ந் தேதியன்றே அதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவுகள் அனுப்பப்பட்டு விட்டன" என்பதையும் முதலமைச்சர் தெரிவித்தார்.

"இத்தனைக்குப் பிறகும், 'தொடர்ந்து போராட வேண்டும்' என்று விவசாயிகள் சங்கச் செயற்குழுக் கூட்டம் முடிவு செய்திருப்பதாகச் செய்தி வெளியாகியிருக்கிறது" என்று முதல்வர் தெரிவித்தார்.

"**ஏதாவது ஓர் அமளியைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்த வேண்டுமென்ற அழுத்தமான எண்ணம் அவர்களிடத்திலே ஊறியிருக்கிறது என்பதை இது காட்டுகிறது" என்று முதலமைச்சர் சுட்டிக் காட்டினார்.**

மேலும் முதலமைச்சர், விவசாயிகள் சங்கக் கோரிக்கைப் பிரச்சினையில் அளிக்கப்பட்ட சலுகைகளின் விவரங்களைப் பிரிவுகள் வாரியாக விளக்கிவிட்டுக் கூறியதாவது:—

"இந்தச் சலுகைகள்பற்றிப் பரிசீலனை செய்யச் சிறையிலுள்ள போராட்டக் குழுவினரை விடுவிக்க வேண்டும் என்று -- விவசாயிகள் போராட்டக் குழுவில் உறுப்பினராக இருந்த பி. எஸ். சின்னதுரை கோரிக்கை விடுத்தார்; 'யார் யாரை விடுதலை செய்யவேண்டும்' என்று கேட்டேன்; தந்திமூலம் ஒரு பட்டியலை அவர் அனுப்பிவைத்தார்; அதில் 10 பேர்களின் பெயர்கள் குறிப்பிட்டிருந்தார்; அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்; எந்த அரசிலாவது இதுபோல் நடந்திருக்கிறதா?

நமது கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், முன்பு இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த போது, பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகவும் இருந்தார்; விலைவாசிப் போராட்டத்தில் அவர் சிறையில் இருந்தபோது, பொதுக் கணக்குக் குழுவின் கூட்டம் நடைபெற்றது; அக்கூட்டத்தில் கலந்துகொள்ள ஒரு நாள் விடுதலை வேண்டும் -- என்று அப்போது பதவியிலிருந்த முதலமைச்சருக்குக் கடிதம் எழுதிக் கேட்டுக் கொண்டார்; ஆனால், அவர் விடுதலையாகி வெளியே வந்தபிறகுதான் அதற்குப் பதில் வந்தது; என்ன பதில் தெரியுமா? -- 'அக்கூட்டத்தில் நீங்கள் கலந்து கொள்ளக் கூடாது; அப்படி உங்களை விடுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது' என்று! இந்தப் பதிலை நாவலர் அவர்கள் சட்ட மன்றத்திலே படித்துக் காட்டுகிறார்; அப்போது அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன், 'கலந்துகொள்ளக்கூடாது என்ற பதில் முன்னே வந்தால் என்ன -- பின்னால் வந்தால் என்ன' என்று வேடிக்கையாகக் கூறினார்; எனவே, இப்போது உள்ள நிலையையும் -- அப்போதைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது என்றால், முன்பு இருந்த ஆட்சியில் நடக்கவில்லை -- முதுகுளத்தூரில் சுடவில்லையா -- 1965-ல இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது சுடவில்லையா -- ஆகவே, நாங்களும் சுட்டோம்" என்று பேசினால், எங்களைவிட முட்டாள்கள் வேறு யாரும் இருக்க முடியாது; அது, 'ஆணவம் -- அகம்பாவகம் -- அடக்கமற்ற தன்மை' என்பதை நான் நன்றாக உணர்கிறேன்; இப்படி யாராவது பேசியிருந்தால், 'அது தவறு' என்பதையும் ஒப்புக்கொள்கின்றேன்.

ஆனால் நான் சொல்வது, தவிர்க்க முடியாத சில காரியங்கள் நடைபெறும் நேரத்தில், அதைப்பற்றி -- அதற்குத் தொடர்புடைய அரசு என்ன கருதுகிறது என்பதைத்தான்; அதைப்பற்றித்தான் எண்ணிப்பார்க்க வேண்டும்.

முதுகுளத்தூரில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து, 'நீதி விசாரணை வேண்டுமென்று கேட்ட நேரத்தில், அப்பொழுது அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம், 'எடுத்ததற்கெல்லாம் நீதி விசாரணை வேண்டும் என்று கேட்டால், பிறகு கலவரம் நடக்கும் இடத்திற்குப் போலீசார் போகவே பயப்படுவார்கள் -- போக மாட்டார்கள்; ஆகவே, நீதி விசாரணை வைக்க முடியாது' என்று இங்கே தெரிவித்தார்கள்.

அதைப்போலவே, 1965-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பக்தவத்சலம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக மத்திய அரசிடமிருந்து பாராட்டு கிடைத்தது; மத்திய அமைச்சராக இருந்த குல்ஜாரிலால் நந்தா, நாடாளுமன்றத்தில் 'தமிழ்நாட்டில் 1965-ம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், தமிழக மாநில முதலமைச்சரவர்கள் எதற்கும் கலங்காத பாறைபோல் இருந்தார்' என்று பாராட்டுத் தெரிவித்தார்.

அப்படிப்பட்ட பாறை உள்ளம் எனக்கு இல்லை; இந்தப் பாவியின் உள்ளம் பாறை உள்ளம் அல்ல பரிதாபப்படும் உள்ளமாகும்; எதிலும் நான் பாறையாக இல்லை -- பாசம் உள்ளவனாகவே இருக்கிறேன்.

இறந்தவர்கள் என்னுடைய சகோதரர்களுக்கு ஒப்பானவர்கள்; அங்கே தாலியிழந்த தாய்மார்கள் என்னுடைய தமக்கைகளுக்கு -- என்னுடைய சகோதரிகளுக்கு -- என்னுடைய மாதாவிற்கு ஒப்பானவர்கள், ஆகவே, என்னுடைய உள்ளம் பாறையாக இருக்க விரும்பவில்லை; அனுதாபத்தோடு -- இரக்க உணர்ச்சியோடுதான் நான் அனைத்தையும் கவனிக்கிறேன்.

"ஜூன் 6-ம் நாள் கோவையில் நடைபெற்ற கட்டைவண்டிப் போராட்டத்தைப் போல பர்தோலி சத்தியாக்கிரகம் கூட நடைபெறவில்லை" என்று பக்தவத்சலம் பாராட்டுகிறார்; 'காந்திக்குக்கூட அந்த யோசனை உதிக்கவில்லை' என்று சொல்லியிருக்கிறார்; 'எப்படித்தான் இந்த யோசனை அவர்களுக்கு உதித்ததோ' என்று வேறு அவர் கூறியிருக்கிறார்.

அப்படிப்பட்ட 'அமைதி' போராட்டத்தில் நடந்தது என்ன? பல போட்டோக்களை முதலமைச்சர் அவையில் காட்டினார்); இப்படிக் கட்டைவண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

ஜூன் 7-ம் நாள் காலை அல்லது பிற்பகலிலிருந்து இரவு 10-மணி வரையில் நிறுத்தப்பட்டிருக்கின்றன; 'இது போக்குவரத்திற்கு இடைஞ்சல் அல்ல -- இது வன்முறை அல்ல' என்று வாதாடுகிறார்கள்.

அன்று காவல் துறையினர் அமைதி காத்தார்கள் -- அதை அனைவரும் பாராட்டினார்கள்; ஆனால், 'அது ஒரு நாள்தான் நடைபெறும்' என்று நான் அறிவித்தேன்; 'ஏனெனில், போலீசார் எல்லா இடங்களிலும் அப்படி அனுமதித்தால், பிறகு நாடு காடாகிவிடும் -- நாடு நாடாக இருக்காது -- காட்டுமிராண்டிகள் இடமாகிவிடும்; ஆகவே, அதை அனுமதிக்க முடியாது' என்று சொன்னேன்.

ஜூன் 5-ம் நாள் நடைபெற்றது 'பந்த்'; 'பந்த்' அல்லது 'வேலை நிறுத்தம்' என்றால், அவரவர்கள் விருப்பப்படி வேலைநிறுத்தத்தில் ஈடுபடவேண்டும்; அவரவர்கள் விருப்பப்படி கடைகளை மூடவேண்டும்; அவரவர்கள் விருப்பப்படி போக்குவரத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஆனால் பத்திரிகைகளில், 'இரயில் ஓடாது -- பஸ் ஓடாது -- கடைகள் திறந்திருக்காது' என்று வந்திருக்கிறது.

விவசாயிகள் போராட்டத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில, 'பஸ்களை ஓட்டவேண்டாம் -- இரயிலை ஓட்டவேண்டாம் -- கடைகளைத் திறக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்' என்றல்லவா போட்டிருக்க வேண்டும்?

ஆனால் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில், 'இர

(4-ம் பக்கம் பார்க்க)

நள்ளிரவில் மலர்ந்த விடுதலை

இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் இதே நாளில்...

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆகஸ்டு 14-ந் தேதியன்று நள்ளிரவில், இந்தியா தனது அடிமைத் தளையை உடைத்தெறிந்துவிட்டுச் சுதந்தர நாடாக மலர்ந்தது!

1942-ம் ஆண்டில் துவக்கப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்துக்கு நாட்டு விடுதலை உச்சகட்டமாக அமைந்தது!

பெதிக் - லாரன்ஸ் பிரபுவின் தலைமையிலான பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவினர், ஆட்சி மாற்றத்துக்கான அரசியல் அடிப்படையை நாட்டினர்.

மாகாண சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் 650 பேரும் இரவு பன்னிரண்டு மணியடித்தவுடன் உறுதிமொழி எடுத்துக் கொள்வதற்காக டாக்டர் இராஜேந்திர பிரசாத் தலைமையில் கூடியிருந்தனர்.

மசோதாவைப் பண்டித ஜவகர்லால் நேரு தாக்கல் செய்து பேசுகையில், 'விதியுடன் கால ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம்' என்று கூறினார்.

"இரவு பன்னிரண்டு மணி அடித்து ஓய்ந்தவுடன், இங்குக் கூடியுள்ள அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் அனைவரும், கீழ்க்கண்டபடி வாக்குறுதி எடுத்துக் கொள்ளுவார்கள்" என்று கூறும் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது:—

"**இன்னல்கள் – தியாகங்கள் ஆகியவற்றின் மூலம் இந்தியப் பெருமக்கள் சுதந்தரம் பெற்றிருக்கும் இந்தப் புனித வேளையில், பழம் பெருமை வாய்ந்த இந்த நாடு உலக அரங்கில் தனக்குரிய இடத்தை அடைவதற்கும் – உலக அமைதிக்கும் – மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும் தன்னாலியன்ற அனைத்தையும் செய்வதற்கு ஏற்ப, இந்திய நாட்டுக்கும் – மக்களுக்கும் சேவை செய்வதற்கு இந்திய அரசியல் நிர்ணயச் சபை உறுப்பினராகிய நான் தாழ்மையுடன் என்னை அர்ப்பணிக்கிறேன்.**"

மசோதாவை ஆதரித்துப் பேசுகையில், பண்டித நேரு பின்வருமாறு கூறினார்:—

"**நமது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது; வாக்குறுதிகளை முழு அளவுக்கு நிறைவேற்ற முடியாவிட்டாலும், கணிசமான அளவுக்கு நிறைவேற்ற வேண்டும்; உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், இந்தியா விழித்து எழுந்து சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்கிறது.**

"**பழையன கழிந்து புதியன புகுதலும் -- நீண்ட நாட்களாக ஒடுக்கப்பட்டிருந்த ஒரு நாட்டின் ஆன்மா விழித்தெழுந்து மீண்டும் பேசும் நிகழ்ச்சியும் வரலாற்றில் அபூர்வமாகத்தான் நிகழும்.**

"**தாய்நாட்டின் சேவைக்கும் -- மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும் எங்களை அர்ப்பணித்துக் கொள்ளுவோம் என்று இந்த நேரத்தில் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுவது முற்றிலும் பொருந்தும்.**"

இரவு மணி பன்னிரண்டு அடித்தவுடன் அவைத் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் எழுந்து நின்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்; அவைத் தலைவர் உறுதிமொழியை ஒவ்வொரு சொற்றொடராகப் படிக்க உறுப்பினர்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் திருப்பிக் கூறினர்.

அதன் பின்னர் அவைத் தலைவர், கீழ்க்காணும் செய்தியை வைசிராய் மவுண்ட்பேட்டன் பிரபுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கொண்டுவந்தார்:—

அரசியல் நிர்ணய சபை இந்தியாவை ஆளுவதற்கான அதிகாரத்தைப் பெற்றுவிட்டது.

மவுண்ட்பேட்டன் பிரபுவை, 1947 ஆகஸ்ட் 15-ம் நான்முதல் இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாக நியமிக்க வேண்டுமென்ற பரிந்துரையினை இந்திய அரசியல் நிர்ணய சபை ஏற்றுக்கொள்கிறது.

இதற்குப்பிறகு பம்பாயைச் சேர்ந்த திருமதி ஹன்சா மேத்தா -- (டாக்டர் சரோஜினி நாயுடு அப்போது அங்கு இல்லாததால்) நாட்டுக்குத் தேசியக் கொடியினை வழங்கினார்.

அரசியல் நிர்ணய சபையின் தீர்மானத்தை டாக்டர் இராசேந்திர பிரசாதும் -- ஜவஹர்லாலும் உடனடியாக வைசிராய் மவுண்ட்பேட்டன் பிரபுவுக்குத் தெரியப்படுத்தினர்.

"எனக்கு அளிக்கப்பட்டுள்ள கௌரவம் குறித்துப் பெருமைப்படுகிறேன்; அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு உங்கள் ஆலோசனைகளை நிறைவேற்ற முழு முயற்சி மேற்கொள்வேன்" என்று மவுண்ட்பேட்டன் பிரபு கூறினார்.

சபை உறுப்பினர்கள் முகமலர்ச்சியுடன் கலைந்து சென்றனர்.

பார்லிமெண்டு கட்டடத்துக்கு வெளியே கூடியிருந்த பெருந் திரளான மக்கள் அவர்களை வாழ்த்தி வரவேற்றனர்.

வரலாறு படைத்த அவை உறுப்பினர்களைக் கண்டு வாழ்த்துவதற்காக உற்சாகம் கரைபுரண்டோடக் காத்து நின்ற கூட்டத்தினரைக் கட்டுப்படுத்துவது போலீசாருக்குப் பெரும் பிரச்சினையாகிவிட்டது.

ஆகஸ்டு 15-ம் நாளன்று மவுண்ட்பேட்டன் பிரபு கவர்னர்-ஜெனரலாகப் பதவியேற்றார்; அப்போதைய தலைமை நீதிபதி கானியா, வைசிராயின் தர்பார் மண்டபத்தில் (இப்போதைய குடியரசுத் தலைவர் மாளிகையின்) அவருக்குப் பதவி உறுதியேற்றச் செய்து வைத்தார்; நேருவின் தலைமையில் பதவியேற்ற புதிய அமைச்சரவைக்குக் கவர்னர்-ஜெனரல் பதவி உறுதியேற்புச் செய்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப்பிறகு மவுண்ட்பேட்டன் பிரபு தமது கோச் வண்டியில் ஏறி அரசியல் நிர்ணய சபை கூடியிருந்த மண்டபத்துக்குப் போய்ச் சேர்ந்தார்; சபைக் கூட்டம் காலை பத்து மணிக்குத் துவங்கியது.

இந்தியா சுதந்தரமடைந்ததைப் பாராட்டி உலகெங்கிலுமிருந்துவந்த வாழ்த்துச் செய்திகளைச் சபைக் கூட்டத்தில் டாக்டர் இராசேந்திர பிரசாத் வாசித்துக் காட்டினார்.

பிரிட்டிஷ் மன்னர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியினை மவுண்ட்பேட்டன் பிரபு வாசித்தார்.

மவுண்ட்பேட்டன் பிரபு தமது உரையில், இந்தியத் தலைவர்களின் விவேகம் -- சகிப்புத்தன்மை -- நட்புறவு ஆகிய நற்குணங்களைப் புகழ்ந்து கூறினார்; 'முதலில் நிர்ணயிக்கப்பட்டிருந்த காலத்திற்கு பத்தரை மாதங்கள் முன்னதாகவே ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு இந்தியத் தலைவர்களின் அருங் குணங்களே காரணம்' என்றார் அவர்.

கவர்னர் -- ஜெனரலின் உரைக்குப் பதிலளித்துப் பேசிய டாக்டர் இராசேந்திர பிரசாத், 'இந்தியாவில பிரிட்டிஷ் ஆட்சி இன்றோடு முடிவடைந்தது; இனிமேல் பிரிட்டனுடன் உறவுகள், சமத்துவம் -- நட்புரிமை -- நன்மை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும்' என்றார்.

அவைக் கூட்டம் முடிந்து திரும்பிச் செல்லுகையில் மவுண்ட்பேட்டனும் -- அவரது மனைவியாரும் -- அவரது மகள் பாமிலாவும் வெளியே காத்திருந்த கூட்டத்தினரின் அன்புப் பிடியில் சிக்கித் தவித்துப் போயினர்; கூட்டத்திலிருந்த எல்லோரும் அவர்களுடன் கைகுலுக்க முயன்றனர்; அவர்கள் வைஸ்ராயின் இல்லத்துக்குப் போய்ச்சேர்ந்த போது நண்பகல் மணி பன்னிரண்டாகிவிட்டது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஓடாது -- பஸ் ஓடாது -- கடைகள் திறந்திருக்காது' என்றுதான் போட்டார்கள்.

இதோ பாருங்கள் -- (ஒரு படம் காட்டப்பட்டது) -- விருதுநகரில் நிறுத்தி வைக்கப்பட்ட கட்டை வண்டிகள் -- விருதுநகரில் வைக்கப்பட்ட வழித்தடைகள் இதோ!

"கற்களைக் கொண்டு சாலைகளை மறித்திருக்கிறார்கள்" என்பதைக் காந்தியடிகளின் வழியைப் பின்பற்றிவரும் மதிப்பிற்குரிய -- மரியாதைக்குரிய கக்கன்ஜி அவர்கள்கூட அதை ஒப்புக்கொண்டு, 'இந்து' பத்திரிகையில் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

பெத்தநாய்க்கன் பாளையம் -- ஆத்தூர் சாலையில் வழித்தடைகள் இதோ -- (ஒரு படம் காட்டப்பட்டது) -- சிமெண்டு பைப்ஸ் சாலையின் குறுக்கே போடப்பட்டிருக்கின்றன.

நாமக்கல் சாலையில் வழித்தடைகள் இதோ -- (ஒரு படம் காட்டப்பட்டது) -- பெரிய பெரிய பாறாங்கற்களை வைத்து வழி தடைபடுத்தப்பட்டிருக்கின்றன.

தஞ்சை முத்துப்பேட்டைக்கு அருகில் வழித்தடை -- (ஒரு படம் காட்டப்பட்டது) -பெரிய பெரிய கற்களை சாலை நடுவில் வைத்து பஸ்கள் தடுக்கப்பட்டன.

மொத்தநாய்க்கன் பாளையம்--ஆத்தூர் சாலையில் வண்டிகள் போட்டு தடுக்கப்பட்டிருக்கின்றன; பல வீடுகள் தாக்கப்பட்டன.

தி. மு. கழகக் கலை நிகழ்ச்சி நடத்தும் மணி - சாமி தாக்கப்பட்டு சேதம் ஏற்பட்டிருப்பது பற்றி சுப்பு அவர்கள் சொன்னார்கள்; உண்மையை ஒத்துக்கொண்டதற்கு நன்றியுடையவனாக இருக்கிறேன்.

பாட்டு பாடியதற்கு மறுநாள் அவர்கள் வீடு தாக்கப்படுவது என்றால், அது எங்கேபோய் நிற்கும் -- பிறகு நாட்டில் நல்லாட்சி நடைபெறமுடியுமா -- எண்ணிப் பார்க்கவேண்டும்.

"முதல் அமைச்சர் அவர்களும் -- எம். ஜி. ஆர். அவர்களும் வராவிட்டால் நான் என் தொகுதியில் தோற்றுப்போயிருப்பேன்" என்று அவர் கூறியிருக்கிறார்; இதே மணி -- சாமி குழுவினர் அவர்களுக்காகப் பல கலை நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுத்திருக்கின்றனர்.

சுப்பு அவர்கள் சொன்னார்கள் -- 'அவர்கள் பாடிய பாட்டுக்கு அந்த வீடு இடிக்கப்பட்டது' என்று; கலை நிகழ்ச்சிகள் நடத்தி, ரூ. 2—ரூ. 3—ரூ 5 என்று தங்கள் செலவு போக மிச்சப்படுத்தி அந்த இரண்டு இளைஞர்களும் இந்த வீட்டைக் கட்டினார்கள்; அவர்களின் வீட்டின் நிலையை இப்படியாக்கிவிட்டார்கள்! அவர்கள் இப்போது ஓட்டல் ஒன்றில் தங்கியிருக்கிறார்கள்.

இரு தரப்பிலும் இப்படிப்பட்டது நடைபெற்றிருக்கின்றன; மன்னார்குடியில் கீழ்ப்பாளம் என்ற இடத்தில், பக்கிரிசாமியின் டீ நீர் விடுதி சேதப்படுத்தப்பட்டிருக்கின்ற படத்தைப் பாருங்கள். (ஒரு படம் காட்டப்பட்டது)

இதோ -- முஸ்லிம் லீக் கட்சியின் ஆதரவாளர் அப்துல் ஜலீலின் கடை கோவை வின்சென்ட் சாலையில் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றது. (ஒரு படம் காட்டப்பட்டது) -- காரணம் என்ன? இதுபோல் பல நடந்திருக்கின்றன.

நான் ஏற்கனவே கூறியதுபோல் அமைதியான சூழ்நிலையில்தான் இந்தப் போராட்டம் தொடங்கியது; ஆனால், இடையில் சிலபேர் புகுந்தார்கள்; விவசாயப் பிரதிநிதிகள் என்னைச் சந்திக்க வேண்டுமென்று விரும்பிய நேரத்திலும், அந்தச் சிலர்தான் இடையில் புகுந்து -- அதற்குத் தடையாக இருந்தார்கள்; திரு. மூக்கையா தேவர் முயற்சி எடுத்தபோது--திரு. பூவராகன் முயற்சி எடுத்தபோதும் அந்தச் சிலர் அதற்குத் தடையாக இருந்தார்கள்; அதனால் விவசாய சங்கக் குழுவினரை சந்திக்க முடியாமல் போய்விட்டது; டாக்டர் ஹண்டே அவர்கள் போன்மூலம் பேசியிருந்தால் அது நடைபெற்றிருக்கக்கூடும்; திருமதி அனந்த நாயகி அம்மையார் போன்மூலம் பேசியிருந்தால் அது நடைபெற்றிருக்கக்கூடும்.

யாரை -- எந்த நேரத்தில், 'பார்க்க முடியாது' என்று கூறியிருக்கிறேன் -- யாரை ஒதுக்கி வைத்திருக்கிறேன்' யாரை மதிக்க நான் தவறியிருக்கிறேன் -- யாரிடம் நான் கௌரவக் குறைவாக நடந்துகொண்டிருக்கிறேன் -- யாரை நான் புறக்கணித்திருக்கிறேன் -- என்பதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

"முதலமைச்சர் அவர்கள் சந்திக்கத் தவறிவிட்டார்; ஆகவே, இப்படி ஏற்பட்டுவிட்டது" என்றால் அது சரியல்ல; நானும் அல்லது அரசு சார்பில் நாங்களும் விவசாயப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்குத் தயாராகத்தான் இருந்தோம்.

இடையில் இந்த சக்திகள் இருந்தார்கள்; அவர்களால்தான் இந்தச் சேதம் நாட்டுக்கு ஏற்பட்டது!

இதற்குப் பிறகாவது அனைவரும் நடைபெற்றவைகளை நன்கு புரிந்துகொண்டு -- இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எந்தக் கட்சியும் கொண்டு வர வேண்டும் என்பதை அனைவரும் புரிந்துகொண்டு -- ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.'

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]

திருவான்மியூரில் பள்ளிக் கட்டடத் திறப்பு

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர் கலந்துகொள்கிறார்

மரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் திருவான்மியூர் பேரூராட்சி தெற்கு மாடவீதிக்கு அருகில் கட்டப்பட்டுள்ள உயர் தொடக்கப் பள்ளியையும், வேளாண்மைத் துணைக் கிடங்குக் கட்டடத்தையும், விடுதலை வெள்ளி விழாவையும் 15—8—72 காலை 8 30 மணிக்கு திரு. பம்மல் நல்லதம்பி தலைமையில் -- மக்கள்திலகம் எம் ஜி ஆர். அவர்கள் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றுவார்; தோழர்கள் டி. வி. இலட்சுமிபதி, சி. இராமலிங்கம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

விடுதலை வெள்ளி விழா-கலைஞர் ஒளி விளக்கேற்றுவார்

விடுதலை ஆண்டின் வெள்ளி விழாவை, சென்னை மாநகராட்சி சீரும் சிறப்பும் பொங்கத்தக்க முறையில் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

ரிப்பன் கட்டடம் -- மூர் அங்காடி -- நேப்பியர் பாலம் -- மேல்நிலைத் தொட்டி (கீழ்ப்பாக்கம் குடிநீர் நிலையம்) -- மேல்நிலைத் தொட்டி (இராபின்சன் பூங்கா) -- நேரு விளையாட்டு அரங்கம் ஆகிய கட்டடங்கள் மின்வண்ண ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்படும்.

முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இன்று (14—8—72) இரவு 9.30 மணிக்கு ரிப்பன் கட்டடத்திலுள்ள அலங்கார மின் விளக்குகளை ஒலிபெறச் செய்வார்.

(1-ம்-பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஒரு வட்டாரக் கூட்டமைப்பு இப்பகுதியில்தான் செயல்படத் துவங்கியிருக்கிறது" என்று தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் இரங்கபாஷ்யம் தெரிவித்தார்.

"இந்த அமைப்பு மின்சாரத்தைப் பொதுவாகச் சேகரித்து சீராக விநியோகிக்க வகை செய்யும்" என்றும் அவர் தெரிவித்தார்.

'தமிழ்நாட்டின் ஒரு நாளைய மின்சாரத் தேவை 1,200 மெகாவாட் ஆகும்" என்றார் அவர்.

கண்ணினும் இனிய சுதந்திரம்! நாட்டின் அருங்கலைச் செல்வங்கள்! கருத்தைக் கவரும் எழில் மிகும் இடங்கள்!

இவைகளை இன்று போலவே என்றும் காப்போம்!!

பயணிகளாக வந்தவர்களை நண்பர்களாக அனுப்புவோம்! நல்லுறவு வளர்ப்போம்!!



அடிமைத் தளையைத் தகர்த்து ஆண்டுகள் இருபத்தைந்து உருண்டோடி விட்டன! அன்று... நமது நாட்டின் அருமை பெருமைகளைக் காணவந்த அயல்நாட்டினர் மிகமிகச் சிலரே! இன்று...ஆயிரக் கணக்கில் அயல்நாட்டுப் பயணிகள் இந்தியாவின் அருமை பெருமைகளைக் கண்டு களித்துச் செல்கின்றனர். தமிழகம் காண விமானங்கள், கப்பல்கள் வாயிலாக வந்தோர் 1961 ஆம் ஆண்டில் 12,084 — இது 1971 ஆம் ஆண்டில் 38,074 ஆக உயர்ந்துள்ளது.

சுற்றுலாத்துறை, தமிழ்நாடு அரசு.

வெளியீடு: இயக்குநர், செய்தி & மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

[illegible]டக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

17--8--72

மீஞ்சூர்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: எம். அப்துல் சாதர்; பேசுவோர்: ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ, கே. நாகராசன் எம்.எல்.ஏ., கா. காளிமுத்து எம்.எல்.ஏ, பி நாகலிங்கம் எம்.எல்.ஏ., எம். கேசவன், கே. வி. சாமி கே. ஆறுமுகம்.

விடுதலை வெள்ளி விழா

திருவான்மியூர் ஊராட்சி மன்றச் சார்பில் 15-8-72 காலை 8 மணிக்கு விடுதலை வெள்ளி விழாக் கொண்டாடப்படும்; திரு. ப. நடராசன் தலைமையில் பி. ஆர். இலட்சுமிகாந்தம் சிறப்புரையாற்றுவார்.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா நிகழ்ச்சிகள்

ஆக. 15 மாலை: கோவை—25-வது சுதந்தர நாள் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

ஆக. 16: கோவை மாவட்டம்.

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன் நிகழ்ச்சிகள்

ஆக. 15 முற்பகல் முதல் இரவு வரை; கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்யும் சுதந்தர நாள் விழா நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளுதல்.

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம் நிகழ்ச்சிகள்

ஆக. 15 மாலை: தர்மபுரி—சுதந்தர நாள் வெள்ளி விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

உழைப்புக்கு உயர்வு தரும் திட்டம்

முதலமைச்சர் துவக்கிவைப்பார்

தமிழக அரசு சீரணி சார்பில் புதிதாக உருவாக்கப்பட்ட 'உழைப்பிற்கு உயர்வு தரும் திட்ட'த்தில், சென்னை மாநகராட்சி பங்கு கொண்டு, அதில் பணிபுரியும் பல்லாயிரத்திற்கு மேற்பட்ட கற்றுணர்ந்த அலுவலர்களும் -- சீரணித் தொண்டர்களும் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுச் செயல்பட இருக்கின்றனர்.

இதன் துவக்க விழா, 15—8—72 காலை 9 மணியளவில் -- பாரிமுனையில் நடைபெறும்; தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் துவக்கிவைப்பார்; தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் விழாவிற்குத் தலைமைதாங்குவார்.